**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 67/2021**

**09.04.2026.**

**DW - 2**

**பி.வா.சா.2. கணேசன் த/பெ. சுப்பையன், அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எதற்காக வாதிகள் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் - தெரியாது. வழக்கு சொத்திற்கு தெற்கு பக்கம் எனக்கு பூர்வீக சொத்துக்கள் உள்ளதாக சொல்லியுள்ளேன். அதன் சர்வே எண். 217 ஆகும். எனக்கு, வழக்கு சொத்திற்கு தெற்கு புறத்தில் சொத்துக்கள் கிடையாது என்றாலும் உண்மையில் அது காளாஞசிமேட்டை சேர்ந்நதவருக்கு சொந்தம் என்றாலும் - சரியல்ல. வழக்கு சொத்தின் சர்வே எண்.95 மற்றும் 96 என்று மட்டும் தெரியும். அதன் விஸ்தீரணம் என்ன, பட்டா யார் பெயரில் உள்ளது, பத்திரம் யார் பெயரில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. பன்னீர் (எ) பத்மநாபன் எனது நண்பர் என்றால் - சரிதான். உண்மையிலேயே வழக்கு சொத்துக்களை பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் நான் பிரதிவாதியின் நண்பர் என்பதால் அவருக்க ஆதரவாக பொய் சாட்சிய அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. பிரதிவாதிக்கு வழக்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் - அனுபவத்தின் மூலமாக கிடைத்தது. பிரதிவாதி வாதிகளுக்கு விவசாயம் செய்வதில் உதவியாக இருந்து வந்தார் என்றாலும் அவருக்கு சொத்துக்களை விற்கவில்லை என்பதால் ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,

சார்பு நீதிபதி

மன்னார்குடி.